**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.46/2008**
**நாள்.25.09.2023**
**வா.சா.1- ஆயிஷாபீவி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

வா.சா.ஆ.1 மாதிரி வரைபடத்தில் A,B,C,D,E என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் தென்புறம் உள்ள சொத்தானது ஆதியில் ஃபாருக் வகையறாவுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஃபாருக் வகையறாவிடமிருந்து தான் எனது தாயார் கதீஜாபீவி கிரையம் பெற்றார் என்றால் சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் எனது தாயாருக்கு வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான். எனது தாயார் கிரையம் பெற்ற தாவா சொத்துக்கான கிரைய பத்திரம் அசல் என்னிடம் தான் உள்ளது. எனது தாயார் கிரையம் பெற்ற பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அந்த கிரையப்பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மையில் எவ்வளவு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பது தெரிந்து விடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வீட்டின் வடபுறம் கிழமேல் 32, தென்வடல் 52 அடி அளவுள்ள நிலம் பிரதிவாதியின் கொள்ளு பாட்டியான உதுமான்பீவிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். உதுமான்பீவி காலத்திற்கு பின்னர் அவரது மகள் மைமூன் பீவிக்கு மேற்படி சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சொத்தில் தான் தற்போது இந்த பிரதிவாதி கூரைவீடு கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி கூரைவீட்டை அகற்றி RCC வீடு கட்டுவதற்கு வானம் தோண்டியபோது தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால், எனது நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ததால் வழக்கு தாக்கல் செய்தேன்.

வா.சா.ஆ.1 வரைபடம் எனது வசதிக்கு தகுந்தாற்போல் வரைந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.152/2008 வழக்கில் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு நான் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 வரைபடத்தில் உள்ள

A,B,C,D,E பகுதிக்கு தென்புறம் 3 கழிப்பறைகள் நான் கட்டியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆனது A,B,C,D,E பகுதிக்கு தென்புறம் உள்ள வீட்டிற்கு செலுத்தப்பட்ட வரி ரசீது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 புகைப்படத்தில் A,B,C,D,E பகுதிக்கு உட்புறத்தில் வானம் தோண்டப்பட்டதாக உள்ளது என்றால் சுவற்றிற்கு உள்ளேயும், வானம் தோண்டியுள்ளார்கள். A,B,C,D,E சுவர் ஃபாருக் மற்றும் எங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றாலும், மேற்படி சுவர் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. எனது தாயார் பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தின்படி சொத்தை அளந்து எடுத்துக் கொள்ள தயாராக உள்ளேனா என்றால் எனது கணவரை தான் கேட்க வேண்டும் என்று சாட்சி பதில் அளிக்கிறார். இந்த A,B,C,D,E சொத்தை ஒட்டி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்புறத்தில் 3 கழிவறைகளை சட்ட விரோதமாக கட்டிக் கொண்டதாலும், இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வடபுறத்தில், வடகிழக்கு மூலையில் ஒரு பகுதியை ஆக்கிரமித்து, வீடு கட்டி கொண்டதாலும் தான் இந்த பிரதிவாதி எனக்கு எதிராகவும், எனது சகோதரிக்கு எதிராகவும் அசல் வழக்கு எண்.152/2008 வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது.

எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்பதால், எனது வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

Digitally signed by
R VANJI NATHAN

**Principal District Munsif**
**Vedasandur**